மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பதநீர் இறக்குகின்ற காலம் 6 மாதம்தான். மீதமிருக்கிற 6 மாதங்களுக்குத் தொழில் செய்ய முடியாத சிரமம் இருக்கிறது. எனவேதான், பனந் தும்பு, நார், ஓலை இவைகளை எடுத்து, பயிற்சி நிலையங்களுக்கு அனுப்ப, ஒர்க்கிங் கேப்பிட்டல், மூலதனம் கொடுக்கிறோம். அதைத்தான் ரூ. 200, ரூ. 250 கொடுக்கிறோம் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10-00.)

3. வினுக்கள்-விடைகள் நேரத்திற்குபின் ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்புவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தினமும் இப்படி எல்லோரும் எழுந்திருந்து நிற்கிறீர்கள். கேட்டால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுகிறீர்கள். இதை எல்லாம் அனுமதித்தால் இதற்கே நேரம் சரியாக இருக்கும். என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். நீங்கள் இனிமேல் ஒன்று செய்யுங்கள். முன் கூட்டியே என்னுடைய அறையில் வந்து, இன்ன காரணத்திற்காக நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப் போகிறேன் என்று சொல்லிவிட்டால் அனுமதிப்பதற்கு வசதியாக இருக்கும். இல்லை என்றால் அந்த பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கே பாயின்ட் ஆப் டிஸ் ஆர்டராக ஆகிவிடுகிறது. ஆகவே, தயவு செய்து நாளையிலிருந்து நான் சொல்கிற முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். திரு. அம்பிகாபதி தயவுசெய்து அமரவேண்டும்.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர். இது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியும். நான் நேரத்தை சுருக்கமாக்க வேண்டுமென்று கருதுகிறேன். நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க மனமில்லாமல், வேறு ஏதாவது எழுப்புவேன் என்பது வேண்டாமென்று சொல்கிறேன். திரு. அம்பிகாபதி அவர்களுக்கு முதலிலேயே சொன்னேன். தயவுசெய்து அமர வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-ந் தேதி இந்த அவையிலே காவல்துறை மானியத்திலே 8 மணி நேர வேலை வேண்டும் என்று பேசினேன். ஆனால் நெல்லை மாவட்ட தினமலர் பத்திரிகையில் 24 மணி நேரம் வேலை வாங்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.

1978 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு. அம்பிகாபதி அவர்கள் விதிகளை நன்ருகத் தெரிந்தவர்கள்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, எழுதிக் கொடுத்தால் நீங்கள் அனுமதிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கூட இங்கே கேட்கக் கூடாது. பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. பேரவைத் தலைவர் மீது களங்கம் கற்பிக்கக் கூடாது. அதைப்பற்றி நீங்கள் எழுதிக் கொடுங்கள்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த நேரம் ஜீரோ அவர் மாதிரி 242-ன் கீழ் எழுப்புகிருர்கள். ஆனல் ஒழுங்குப் பிரச்னை என்பது திடீரென்று வருவது. அதை எழுதிக் கொடுங்கள் என்று சொன்னல் எங்களுக்கு ஆபத்து வந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது என்று சொல்லவில்லை. நீங்கள் உண்மையான பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணி இருப்பீர்கள், ஒத்துக் கொள்கிறேன். அதைப் பார்த்து மற்றவர்களும் நானும் பாயின்ட் ஆப் ஆர்டர், நானும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று தொடர்ந்து எழுப்புவதைத் தவிர்க்கலாம் என்பதற்காகத் தான் சொல்கிறேன். இந்த அவையின் நேரம் வீணுகக் கூடாது, உறுப்பினர்களுக்குள்ள உரிமையைப் பறிக்கவில்லை.

4. தகவல் கோரல்.

(அ) டெல்லி செல்லும் தமிழ் நாடு விரைவு ரயில் வண்டியில் தமிழிலும் அறிவிப்பு செய்வது குறித்து.

திரு. துரை முத்துசாமி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து டெல்லிக்குப் போகிற தமிழ்நாடு எக்ஸ்பிரசில் செய்தியும் அறிவிப்பும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் சொல்கிருர்கள். தமிழிலே சொல்ல வேண்டும் என்று நாங்கள் சென்றபோது கூட, பொது நிறுவனங்கள் குழுவில் சென்றபோது கூட, சட்ட மன்ற உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவித்தோம்.

ஆனல், அதற்கு எந்தவிதத் தகவலும் வரவில்லை. எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட மன்ற உறுப்பினர் யாரிடம் எழுதிக் கொடுத்தார் என்பது பற்றி எனக்குத் தகவல் இல்லை. இது பெரிய பிரச்சினை. அவையிலே அனைவரும் கூடி